தமிழ்த்தகுதித்தேர்வு

# எவ்வகை வாக்கியம் எனக் கண்டெழுதுதல்

Sparks Academy

## வினை வகைகள்

- தன்வினை
- பிறவினை
- செய்வினை
- செயப்பாட்டுவினை
- உடன்பாட்டுவினை
- எதிர்மறைவினை

## 1. தன் வினை

தன்வினை என்பது ஒருவர் தானே செய்வது. ஒரு எழுவாய் தானே ஒரு செயலை செய்வது தன்வினை ஆகும்.

(எ.கா):

- செல்வி பாடம் கற்றாள்
- என்னும் தொடரில், கற்றலாகிய தொழிலை செல்வி செய்தாள் என்பது பொருள்.
- கரையைச் சேர்வான்.
- நாதஸ் திருந்தினான்.
- அடங்குவது

## 2. பிறவினை

பிறவினை என்பது பிறரைச் செய்யும்படி ஆக்குவது.

- ஒருவர் ஒரு செயலை பிறரைக் கொண்டு செய்தால் அது பிறவினை வாக்கியம் ஆகும்.
- 'பித்து' 'வித்து' எனும் சொற்கள் சேர்ந்து வரும்.

(எ.கா):

- ஆசிரியை பாடம் கற்பித்தார்
- என்பது சொல்லாயின், ஆசிரியை வேறு யாரையோ கற்க வைத்தார் என்பது பொருளாகும்.
- கரையில் சேர்ப்பான்
- மணி திருத்தினான்
- அடக்குவது

## 3. செய்வினை வாக்கியம் (Active Voice)

- செய்த பொருளுக்கு முதன்மை தருவது **செய்வினை** ஆகும்.
- செயப்படுபொருளோடு 'ஐ' எனும் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்துவரும். சில சமயம் 'ஐ' மறைந்தும் வரும்.

(எ.கா):

- **தச்சன் நாற்காலியைச்செய்தான்** என்ற இத்தொடரில், செய்த பொருளான நாற்காலிக்கு முதன்மை தரப்பட்டுள்ளது.
- **கம்பர் இராமாயணத்தை இயற்றினார்**
- **இராதா பொம்மையைச் செய்தாள்**

## 4. செயப்பாட்டுவினை வாக்கியம் (Passive Voice)

- செய்யப்பட்ட பொருளுக்கு முதன்மை தருவது செயப்பாட்டுவினை ஆகும்.
- எழுவாயோடு ‘ஆல்’ எனும் மூன்றாம் வேற்றுமை உருபும் பயனிலையோடு பட்டது, பெற்றது என்ற சொற்கள் சேர்ந்துவரும்.

(எ.கா):

- நாற்காலி தச்சனால் செய்யப்பட்டது என்ற இத்தொடரில், செய்யப்பட்ட பொருளான தச்சனுக்கு முதன்மை தரப்பட்டுள்ளது.
- இராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டது.
- பொம்மை இராதாவால் செய்யப்பட்டது.

## 5. உடன்பாட்டுவினை வாக்கியம்

- ஒரு செயலைச் செய்வதற்கு உடன்பட்ட நிலையைத் தான் உடன்பாட்டுவினை என்பர்.

(எ.கா):

- குயிலி வீட்டுப்பாடத்தை எழுதினார்
- கண்ணன் உணவு உண்டான்
- கபிலன் வருவான்

## 6. எதிர்மறைவினை வாக்கியம்

- ஒருவன் ஒரு செயலைச் செய்ய உடன்படா நிலையே எதிர்மறைவினை என்பர்.

(எ.கா):

- குயிலி வீட்டுப்பாடத்தை எழுதவில்லை
- கண்ணன் உணவு உண்ணவில்லை
- கபிலன் வரமாட்டான்

Mob: 81908 79379